பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 12 | ஞாயிற்றுக்கிழமை | 29.10.2023 | கதிர் 352

## இது ரகசியம் அல்ல!



கடந்த சில நாட்களாகவே சமூக வலைத்தளங்களில் பரபரப்பான பேசுபொருள் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தன் பதவி விலகவேண்டும் என்று அதே ☞ 2

# புதிய கடற்றொழில் சட்டம் நிறைவேறினால் கடல் வளங்கள் வெளிநாட்டுச் சக்திகளுக்கு

## தாரைவார்க்கப்படும் என தொழிற்சங்கவாதி தினேஸ் சுரஞ்சன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

ஆளும் தரப்புக் கொண்டுவரவுள்ள புதியசட்டத்தை நிறைவேறுமானால் இலங்கையின் வளமான கடற்பரப்புக்கள் வெளிநாட்டு சக்திகளிடம் சென்றடைந்துவிடும் என இலங்கை மீனவ தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் தினேஷ் சுரஞ்சன் பெனாண்டோ தெரிவித்தார் .

யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள தந்தைசெல்வாகலையரங்கத்தில் நேற்று இடம்பெற்ற வடமாகாண மீனவ அமைப்புகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் சுதந்திரமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற மீனவ சமூகத்தை மீன்பிடியில் இருந்து அப்புறப்படுத்தி வெளிநாட்டு பல்தேசியக் கம்பெனிகளுக்கு எமது கடல் வளத்தை தாரை வார்க்கும் நோக்கில் புதிய சட்டத்திருத்தம் கொண்டுவரப்படுகின்றது.

புதிய கடற்தொழில் சட்டத்தை மீனவ சங்கங்களோ சமாசங்களோ கோராத நிலையில் யாரின் தேவைக்காக அல்லது யாரின் நோக்கத்தை நிறைவுசெய்வதற்காக புதிய சட்டத்திருத்தத்தை கொண்டு வர உள்ளார்கள் என்ற சந்தேகம் எழுகிறது.

நாம் 1996 ஆம் ஆண்டு ☞ 2

# ஜப்பானிய போர்க் கப்பல் திருமலைக்கு வருகை

ஜப்பானின் கடல் தன்னியக்க பாதுகாப்பு படைக்கு சொந்தமான அகிபோனோ டிடி-108 எனும்கப்பல்திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கடற்படையின் சம்பிரதாயங்களுக்கு அமைய, இலங்கை கடற்படையினரால் குறித்த கப்பல் வரவேற்கப்பட்டதோடு டிஸ்ரோடர்வகையைசேர்ந்த இந்த கப்பல் 150 மீற்றர் நீளம் கொண்டதாகும்.

இந்த கப்பலில் 172 பணியாளர்கள் உள்ளதோடு கப்பல் நாட்டில் நங்கூர ☞ 8

# யானை தாக்கி ஒருவர் காயம்

(ந.லோகதயாளன்.)

நெடுங்கேணியில் வயல் காவலிற்கு இருந்தவரைநேற்றுஅதிகாலை யானை தாக்கியதில் அவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சபாபதிப்பிள்ளை நந்தகுமார் என்னும் 40 வயது குடும்பஸ்தரே இவ்வாறு யானையின் தாக்குதலில் பலத்த காயங்களிற்கு இலக்காகியுள்ளார்.

ஒலுமடு முதுரம்பிட்டிப் பகுதியில் வீட்டின் அருகே உள்ள வயலில் காவல் இருந்த ☞ 8

# மின் கட்டணம் குறையாவிட்டால் வெதுப்பக பொருள் விலை உயரும்

## வெதுப்பக உரிமையாளர் சங்க தலைவர் தெரிவிப்பு

மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான தீர்மானத்தை ஆட்சியாளர்கள்மீள்பரிசீலனை செய்யாவிட்டால் வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையினை அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மின்சார கட்டண உயர்வால் எமது தொழிற்துறை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணம் 400 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதனுடன் 36 சதவீத வருமான வரியும் 15 சதவீத வற் வரியும் செலுத்தப்படவேண்டும். வெதுப்பக உற்பத்திப் பொருட்களின்விலையை மேலும் அதிகரித்தால் நுகர்வோர் கொள்வனவு குறைவடையும்.

இதனால் எமது தொழிற்துறை மேலும் சிக்கலை எதிர்நோக்கும் நிலைமைகள் ஏற்படும். வெதுப்பகஉற்பத்திகளின் விலையினை தற்போதையமட்டத்தில்தொடர்ந்தும் பேணுவதானால் அரசாங்கத்தின்மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் வரிக்கொள்கை தீர்மானங்கள் மீள் பரிசீலனைசெய்யப்பட்டு நிவாரணம்வழங்கப்பட வேண்டும் என்றார்.

# எல்லை தாண்டிய 3 படகுகள் 25 மீனவருடன் நேற்று கைது

(ந.லோகதயாளன்.)

இலங்கைக்கடற்பரப்பிற்குள் எல்லைதாண்டி உள்நுழைந்த 3 படகுகளில்இருந்த 25 இந்திய மீனவர்கள் நேற்றிரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய 3 படகுகளில் இருந்த 25 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு இன்று அதிகாலை மன்னார் கடற்படை முகாமின் இறங்குதுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட மீனவர்கள் அனைவரும் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம்ஒப்படைக்கப்பட்டு நீதிவானிடம்முற்படுத்தப் படவுள்ளனர். ☞ 8

# கடல் ஆய்வில் ஈடுபட சீன கப்பலுக்கு அனுமதி

## இன்று புறப்படுகின்றது

(ந.லோகதயாளன்.)

சீன கடல் ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 கொழும்புத் துறைமுகத்தில் மூன்று நாள்கள் தரித்திருந்ததைத் தொடர்ந்து கடல் ஆய்விற்குப்புறப்படுவதற்கான அனுமதி நேற்று மதியம் பாதுகாப்புஅமைச்சினால் வழங்கப்பட்டது.

இந்தக் கப்பலில் இலங்கையர்கள் 7 பேரை ஏற்றிச் செல்லுமாறு இலங்கைத் தரப்பால் கோரப்பட்டபோதும் போதிய தங்குமிட வசதிகள் இல்லாத காரணத்தால் 6 பேரை மட்டுமே தம்மால் கப்பலில் ஏற்ற முடியும் என்று சீனா திட்டவட்டமாகத் ☞ 8

# போராட்டக்காரர்களுக்கு நீதிமன்றம் நேற்று பிணை

சமூகச் செயற்பாட்டாளர் டானிஷ் அலி ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான வழக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை,எதிர்ப்பு நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்ட மருத்துவபீட மாணவ செயற்பாட்டாளர்குழுவின் ஏற்பாட்டாளர் நவீன் தாரக்க உள்ளிட்ட இருவரும்பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக கொழும்பு புதிய நகர மண்டபத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதுக்கடை 07ஆம் இலக்க நீதிமன்றத்தினால், தலா ஒரு ☞ 8

# நிதியில்லை என்று காரணம் கூறாமல் மாகாண தேர்தல்களை நடத்துங்கள்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

ஏறத்தாழ ஒரு முழுமையான பதவிக்காலத்தை இழந்திருக்கும் மாகாணசபைகளுக்கானதேர்தலை உடனடியாக நடத்தி நாட்டின் ஜனநாயக மரபைக் காக்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2024ஆம் ஆண்டைத் தேர்தல் ஆண்டாக ஜனாதிபதி கூறியிருக்கின்றார். அனேகமாக அடுத்தவருடம்நவம்பர்மாதத்திற்கு முன்பாக ஜனாபதித் தேர்தல் நடைபெறும் என்றும் அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார். வருகிற 2024ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலும் தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. ஏற்கனவே வேட்பு மனுக்கள் கோரப்பட்டுகட்சிகளும்சுயேச்சைக் குழுக்களும் பல கோடி நிதியை வேட்புமனு தாக்கலுக்காக கட்டியுள்ளன. ஆனால்தேர்தலுக்கு நிதி இல்லை என்று ஆளும் தரப்பு சாக்குபோக்கு சொல்லி குறித்த தேர்தல் எப்பொழுது நடைபெறும் என்பது தெரியாத நிலையில் உள்ளது. உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படலாம் என்றும் அதற்கான சட்டதிருத்தம் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்படுகின்றது. ☞ 8

# துறைமுக நிதி நகரில் தீர்வையற்ற கடைநடத்தும் தகமை வெளியீடு

கொழும்பு துறைமுக நகரில் சுங்கத் தீர்வையற்ற சில்லறை வர்த்தக நிலையங்கள் அல்லது சுங்கத் தீர்வையற்ற வர்த்தக நிலையத் தொகுதிகளின் செயற்பாட்டுநடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான தகைமைகள் தொடர்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற அடிப்படையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி விசேட வர்த்தமானி அறிவித்தலில் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர் சுமந்திரன் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கருத்துத் தெரிவித்த விவகாரம்தான். அந்தப் பேட்டி பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியானதும் பற்றிக்கொண்டது.

அங்கு சுமந்திரனிடம் கேட்கப்பட்ட கேள்வி இதுதான். ''288 நாடாளுமன்ற நாள்களில் வெறுமனே 39 நாள்கள்தான் நாடாளுமன்றத்துக்குஇரா.சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல்அறியும்உரிமைச்சட்டத்தின் ஊடாக பெறப்பட்டுள்ளதகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

"அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு நாடாளுமன்றப் படிகளாக 4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், தொலைபேசிமற்றும்போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4 லட்சத்து 19 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது மக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்புப் பற்றிப் பேசப்படுகின்ற இந்தச்சந்தர்ப்பத்தில் இதுவொரு மாற்று வடிவமாக அமைகின்றதா? இது ஊழலாக அமையாதா?''

இதற்குசுமந்திரன்அளித்தபதில்-

''சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்துக்கு வருகை தரமுடியாதிருக்கின்றமைதொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன்.

''அந்தவகையில் நான் ஒருவிடயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்குமுன்னதாகஅவரால் நாடாளுமன்றத்துக்கு சமுகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்படத் தொடங்கிய சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாகப் பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்தினார்.

''2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம்நபராக அதிகூடுதல் வாக்குகளால் தெரிவு செய்திருக்கின்றார்கள்.அவர்கள்தனது உடல்நிலைமைகளை அறிந்தே தெரிவுசெய்திருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அதனை சம்பந்தன் மீண்டும் நினைவுபடுத்தினார்.

''எனினும், திருகோணமலை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்து செயற்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நாங்கள் நியமித்தாலும் அவர் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுவாரா என்பது பற்றிய பல கரிசனைகள் உள்ளன.

''எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியானவிடயங்களைமுன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்துவரும் காலத்தில் அதுதொடர்பான சில நடவடிக்கைளை எடுப்போம்''. - என்றார்.

இதுவொன்றும் புதிய விடயமல்ல, தமிழ்அரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் ஒன்றின் பின்னரும் இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டு, சம்பந்தனுடன் பேசுவதற்காக சிலரைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் சம்பந்தனைச் சந்தித்தபோதும், அவர் சுமந்திரனுக்குச் சொன்ன விளக்கத்தையே கூறியிருந்தார். ஒருவேளை அந்த விளக்கத்தைத்தான் சம்பந்தர் தன்னிடம் சொன்னதாக சுமந்திரன் அந்தத் தொலைக்காட்சிப் பேட்டியிலும் கூறியிருக்கக்கூடும்.

இருந்தாலும், சுமந்திரனின் இந்தச்செயல் வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை என்று கட்சியின் மற்றொரு மூத்த சட்டத்தரணியான தவராசா சம்பந்தனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதுவும் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. அதற்குதமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி ஒரு பதில் எழுதியிருந்தார். அதில் சம்பந்தர் கூட்டணிக்குச் செய்யாதது துரோகத்தையா சுமந்திரன் இப்போது செய்துவிட்டார் என்பதைப் போன்று கேட்டிருந்தார்.

இப்படியே இந்தச்சர்ச்சை நீண்டு கொண்டே செல்கின்றது. இந்த விடயத்தில் சுமந்திரன் கூறியது சரிதான் என்று வாதிடுவோரும் உள்ளனர். இல்லை அவர் செய்தது பிழைதான் என்று வாதிடுவோரும் உள்ளனர். சம்பந்தர் ஒரு மூத்த தலைவர் என்கிற வகையில் தெற்கு அரசியல்வாதிகள் மத்தியிலும் சில கருத்துக்களை ஆணித்தரமாகத் தெரிவிக்கும் வல்லமை இன்றளவும் அவரிடம் இருக்கிறது என்பதை ஒரு சாதகமான அம்சம்தான். அதேநேரம் அவர் பிரதிநித்துவப்படுத்தும் திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்திற்கு எடுத்துச் சென்று பேசுவதற்கு அவருக்கு வயோதிபம் தடையாக இருக்கின்றது என்பது பாதகமான அம்சம்தான். இந்த சாதகமும் பாதகமும் இனம் சார்ந்தே இருக்கின்றது.

சம்பந்தர் நாடாளுமன்றப் பதவியிலிருந்துநீங்கிவிட்டால்பேச்ச உள்ளிட்ட அமைதி முயற்சிகளில் இருந்து அவரை ரணில் போன்ற தலைவர்கள் மிக இலகுவாக ஓரங்கட்டிவிடுவார்கள். அதன் பின்னர் சிங்களத் தலைவர்கள் மத்தியில் குரல் உயர்த்தி ஆணித்தரமாகக் கருத்துரைக்கக்கூடிய ஒரு தமிழ்த் தலைவரை இப்போதைக்குப் பெறமுடியாது. அதேநேரம், நாடாளுமன்றத்தில் திருகோணமலை மக்களுக்கான பிரதிநிதித்துவத்தையும் இட்டு நிரப்பியாகவேண்டும் என்கிற சிக்கலில் இந்த விடயத்தில் சம்பந்தரேதான் முடிவெடுத்தாக வேண்டும்.

நான் இன்று உங்களுக்குச் சொல்ல வந்த விடயம் அதுவல்ல, சம்பந்தன் சுமந்திரன் விவகாரம் தொடர்பில் அடுத்த வாரம் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா சம்பந்தரைச் நேரில் சந்தித்துப் பேசவுள்ளார் என்று அறிய வந்தது. எதிரிக்கு எதிரி நண்பன் என்கிற கோதாவில் இந்தச் சந்திப்பு நடக்கிறதா என்பது தெரியாது, இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் பெருந்தலைவரைத் தலைவர் ஏன் சந்திக்கப் போகிறார் என்பது அறியப்படவேண்டிய சுவாரஸியமான விடயம்தானே மக்களே! அதனால்தான் உங்கள் காதில் போட்டு வைக்கிறேன்.



இங்கே நான் பதிவிட்டுள்ள படம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா அவர்களை கொழும்புதனியார் வைத்தியசாலையில், கிழக்கு மாகாண முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை மிக அண்மையில் சந்தித்து நலன் விசாரித்தபோது எடுத்த படம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய கடற்றொழில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப்பட்ட கடற் தொழில் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வந்து இழுவைமடித் தொழிலை முற்றாக தடை செய்யுமாறு பல தடவைகள் ஆட்சியாளர்களிடம் கோரிக்கை முன் வைத்துள்ளேன், இதுவரை செய்யவில்லை.

ஆனால்தற்போதுமீனவசமூகம் கோராத புதிய சட்ட திருத்தத்தின் மூலம் வெளிநாட்டு படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதற்கான சட்ட நீதியான அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது.

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன காலத்தில் இலங்கை கடற்பரப்புக்குள் சீன கப்பல்கள் மீன்பிடியில் ஈடுபட்டன.

இலங்கையில் சுமார் ஐந்து இலட்சம் கிலோ மீற்றர் வளமான கடற் பிரதேசத்தை வெளிநாட்டு சக்திகளுக்கு தாரை வார்க்கும் நோக்கில் புதிய சட்ட திருத்தத்தில் கடற்தொழில் அமைச்சருக்கும் பணிப்பாளருக்கும் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று இடங்களையும் இயற்கை வளங்களையும் அந்நிய நாடுகளுக்கு விற்றுவிட்ட நிலையில் எஞ்சிய கடல் வளத்தையும் வெளிநாடுகளுக்கு விற்கப் போகிறார்கள்.

இலங்கையில் பிறந்த மீனவ சமூகத்தினரை, தமது தொழில் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு எவ்வித அருகதையும் அற்றவர்களாகக் கட்டிப்போடுவதற்கு புதிய சட்டத்தின் ஊடாக வழி வகுக்கப்படுகிறது.

ஆகவே ஆபத்தான கடற் தொழில் சட்டத்தை எதிர்ப்பதற்கு இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த மீனவ சமூகங்களும் தயாராக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்


# வேலைவாய்ப்பு

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரில் இருக்கும் எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு**

• **Marketing Manager**
(IT Field )
யாழ்ப்பாணம் - 1 பேர்
Basic Salary Rs. 75,000/
(Commission Based)
Experience 5 Years

• **Showroom Assistants**
யாழ்ப்பாணம் - 3 பேர்
கிளிநொச்சி - 2 பேர்
மன்னார் - 2 பேர்
Basic Salary Rs. 28,000/-

• **Service Centre Assistants**
யாழ்ப்பாணம் - 3 பேர்
கிளிநொச்சி - 2 பேர்
மன்னார் - 2 பேர்
Basic Salary Rs. 30,000/-

• **Trainee CCTv Technicians**
All Location
Salary Rs. 20,000/-

• **Driver**
யாழ்ப்பாணம் - 2 பேர்
Salary Rs. 40,000/-



கணினிசார் அறிவு மற்றும் குறித்த துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (Driving Licence is Compulsory)

தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

மேலும் EPF, ETF வழங்கப்படும்.
தங்களது தகுதிக் கேற்ற வேதனம் வழங்கப்படும்.
தங்களது விண்ணப்பங்களை 05.11.2023 இற்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தபால் மூலம்**
194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

NALIN Information Technologies(Pvt)Ltd
Computers of the North

Email - info@nit.lk
Contact No - 021 222 1121
077 542 7426

காலைக்கதிர் Kalaikkathir

# வரவு – செலவுத் திட்டத்திற்கு பொது ஜன பெரமுன எதிர்ப்பு?

## ரன்ஜித் பண்டார கூறுகிறார்



வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பது குறித்து கட்சி என்ற ரீதியில் தீர்மானிக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் ரன்ஜித் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதா, வரவு - செலவுத் திட்டம் தொடர்பான எமது கருத்துக்களை முன்வைப்பதா என்பதை நாம் கட்சி என்ற ரீதியில் தீர்மானிப்போம்.

கட்சி முடிவுகளை எடுத்தால் நாம் அறிவிப்போம். அமைச்சரவை மாற்றம் தொடர்பாக கட்சியின் செயலாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இன்று மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறைந்த கட்டணத்தில் மின் சாரத்தை வழங்கும் திட்டத்தை பேசிய கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பினார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பினார்கள். மின்கட்டணத்தை உயர்த்திதான், மின்சார சபையை இலாபத்தில் இயங்கவைக்க வேண்டுமெனில், மின்சக்தி அமைச்சொன்றோ மின்சார சபையோ தேவையில்லை. - என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தினமும் 200 பேருக்கு எதிராக யாழில் சட்ட நடவடிக்கைகள்

## யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் அதிபர் தகவல்

யாழில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் குற்றச் சாட்டில் தினம் 200 இற்கும் மேற்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் அதிபர் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

யாழில் வீதி விபத்துக்கள், போக்குவரத்து நெரிசல்கள் அதிகரித்து உள்ளமையால் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களில் உள்ள போக்குவரத்து பிரிவு பொலிஸார் விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால் தினமும் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் சுமார் 200 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களில் சுமார் 10 வீதமானவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகிறது. ஏனையோருக்கு தண்டம் விதிக்கப்படுகிறது' இவ்வாறு அவர் தெரிவித்தார். (05)

# முரணான கருத்து தெரிவித்தால் தேரரும் கைது செய்யப்படலாம்?

## ஆளுநர் செந்தில் எச்சரிக்கை

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத் தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணத்தின் காணி விடுப்பு பணிகள் மகாவலி அமைச்சின் கீழ் சட்டரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பணிகள் ஒருபோதும் இன, மத அடிப்படையில் முன்னெடுக்கப்படமாட்டா.

மகாவலி வேலைத்திட்டத்திற்காக கிழக்கின் கோரளைப்பற்று பகுதியிலிருந்து தமிழர்களும், நாவலடி பகுதியிலிருந்து முஸ்லிம்களும் அகற்றப்பட்டிருந்த நிலையில் இந்த பணிகள் இன, மத அடிப்படையில் அல்லாது சட்டரீதியாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கிராம சேவகர்களிடத்திலிருக்கும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே காணிகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக சிங்கள மக்களின் குடியிருப்புகள் மற்றும் அங்கிருந்து அகற்றப்படுகின்றது என்ற வகையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அறிக்கைகளும் பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதனால் மேற்படி முன்னெடுப்புகளின்போது சகல இனத்தவர்களுக்கும் இலங்கையர் என்ற வகையிலேயே சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதோடு, அதுகுறித்து அநாவசியமாக கருத்துக்களை வெளிப்படுத்த மூன்றாம் தரப்பினர் முற்படக் கூடாது. - என்றும் ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். (05)



# சம்பந்தன் பதவிக்கு சுமந்திரன் இலக்கு

## சாடுகிறார் ஈ.பி.டி.பி. ரங்கன்

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனின் பதவியை கையகப்படுத்த எம்.ஏ.சுமந்திரன் முனைகிறார் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற வேண்டும் என தீர்மானிப்பது அவர்களின் கட்சியின் தீர்மானம். அதனை அவர்கள் கட்சிக்குள் பேசி தீர்மானிக்க முடியும். அவ்வாறு செய்ய முடியும் என்பது ஒரு ஜனாதிபதி சட்டத்தரணிக்கு தெரியும்.

அவ்வாறான சூழலில் பொது வெளியில் ஊடகங்கள் ஊடாக சம்பந்தனுக்கு வயது முதிர்ந்து விட்டது. அவர் பதவி விலக வேண்டும் என கூறி கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி அதன் ஊடாக சம்பந்தனின் பதவியை , சுமந்திரன் இலக்கு வைத்துள்ளார் என்பது தெளிவாக தெரிகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். (05)

# பாலியல் நோய்களை கண்டறியச் செயலி

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

எச்.ஐ.வி. உள்ளிட்ட பாலியல் நோய்களைக் கண்டறியும் வகையில் தொலைபேசி செயலி ஒன்றை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த செயலி நோ போர் சுயர் (Know Four Sure) எனப் பெயரிடப்பட்டுள்ளதாக பாலியல் மற்றும் எச்.ஐ.வி. தடுப்புத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபதிரன தெரிவித்துள்ளார்.

இந்த செயலியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பிதிலளிப்பதன் மூலம், அந்தப் பதில்களின் அடிப்படையில் பயனருக்கு எச்ஐவி தொற்று உள்ளதா? என்பது தொடர்பாக அறிந்துகொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் எச்ஐவி தொற்றைக் கண்டறிவதற்கு பரிசோதனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 011 26 96 433 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வைத்தியர் ஜானகி விதானபதிரன மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# பாடகி மீது பாலியல் துன்புறுத்தல்கள் ஜா எலவில் கிட்டார் கலைஞர் கைது

பிரபல இசைக்குழு ஒன்றின் பெண் பாடகியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் அதே இசைக்குழுவை சேர்ந்த கிட்டார் கலைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் ஜா-எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயது நிரம்பிய குறித்த இசைக்குழுவின் கிட்டார் கலைஞர் ஜா-எல துடெல்ல பகுதியை சேர்ந்தவராவார்.

நீர்கொழும்பில் இயங்கி வரும் குறித்த இசைக்குழுவைச் சேர்ந்த 28 வயதான பாடகி, தனது முறைப்பாட்டை சமர்ப்பித்ததுடன், போக்குவரத்து வசதிகளுக்காக தனது இசைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பஸ்ஸில் சந்தேக நபர் தன்னை உடல் ரீதியாகவும், வாய்மொழி மூலமாகவும் தாக்கியதாகக் குறித்த முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

ஜாஎல பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் நிலைய கட்டளைத் தளபதி உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ரேணுகாவால் ஜாஎல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் சமிந்த எதிரிசூரியவின் பணிப்புரையின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)





# வழிப்பறி கொள்ளையனை துரத்தி தாக்கிய இளம் தாய்

## மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு ஓட்டம்

தனது சங்கிலியை அறுத்த வழிப்பறி கொள்ளையர்களை இளம் தாய் ஒருவர் துரத்திய போது , கொள்ளையர்கள் தமது மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியை சேர்ந்த இளம் தாய் ஒருவர் வியாழக்கிழமை மதியம் தனது பிள்ளையை முன்பள்ளியில் இருந்து ஏற்றிக்கொண்டு வீடு திரும்பிய போது , ஆள்நடமாற்றம் அற்ற பகுதியில் மோட்டார் சைக்கிள் நின்ற இருவர் , அவரை மறித்து . நபர் ஒருவரின் பெயரை கூறி வினாவியுள்ளனர்.

அவரை தனக்கு தெரியாது என கூறி செல்ல முற்பட்ட வேளை அவரது முக்கால் பவுண் சங்கிலியை அறுத்துக்கொண்டு , பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளை தள்ளி விட்டு, தமது மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுள்ளனர்.

உடனே சுதாகரித்துக்கொண்ட இளம் தாய் , தனது மோட்டார் சைக்கிளில் சத்தமிட்டவாறு கொள்ளையர்களை துரத்தி சென்ற போது , வீதியில் பயணித்தவர்கள் கொள்ளையர்களை மடக்கி பிடிக்க முற்பட்ட வேளை கொள்ளையர்கள் தமது மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், கொள்ளையர்கள் கைவிட்டு சென்ற மோட்டார்சைக்கிளையும் பொலிஸ்நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். (05)

# காட்டில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புகளால் பரபரப்பு



மாதம்பே, பனிரெண்டாவ வனப்பகுதியில் மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வியாழக்கிழமை பிற்பகல் பொலிஸாருக்குக்கிடைத்த இரகசிய தகவலையடுத்தே குறித்த எலும்புத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த எலும்புகள் யாருடையது என்பது இதுவரை அடையாளம் காணப்படாமல் உள்ள நிலையில், அவை சில மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த நபருடையதாக இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை மாதம்பே பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கானல் நீர்

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான க.சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார். அடுத்த ஆண்டு அரசுத் தலைவர் தேர்தல் முதலிலும் பொதுத் தேர்தல் அதை அடுத்தும் நடக்கும் என்றும் 2025 மாகாண சபைத் தேர்தல் நடக்கும் என்றும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் அறிவித்திருந்தார். அதையொட்டியே சுரேஸ் பிரேமச்சந்திரனின் கருத்து வந்துள்ளது.

”கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்கான எல்லை மீள் நிர்ணயங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டதாகவும் மீள்நிர்ணயம் செய்த பின்பு தேர்தல்கள் நடைபெறும் என்றும் பேசப்பட்டாலும் எல்லைகளை மீளவும் திருத்திக்கொள்வதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மாகாண தேர்தல் சட்டதிட்டங்களுக்கு இணங்க மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும்படி தமிழர் தரப்பு கோரிய பொழுதும் அதற்கான எத்தகைய நடவடிக்கைகளையும் ஆளும் தரப்புகள் மேற்கொள்ளவில்லை.

இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சி முறைக்குள் அதிகார பரவலாக்கத்தின் ஊடாக மாகாணசபை முறைமை ஒன்று உருவாக்கப்பட்டது. வடக்கு– கிழக்கு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறைமை இல்லாவிட்டாலும்கூட, அதுவே இந்த அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகவும் இருக்கின்றது. அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்காக அரசமைப்பில் பதின்மூன்றாவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. மாகாணசபைகள் அதிகாரத்தில் இல்லாத காலத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாகவும் ஏனைய வழிமுறைகளிலும் மாகாணத்திற்கு உரித்தான பல அதிகாரங்களை மத்திய ஆளுரம் தரப்பு மீளப்பறித்துக்கொண்டது. இன்றும் அது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதனூடாக மாகாணசபை ஒரு அர்த்தமற்ற நிர்வாக அலகாக மாற்றப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, வாழ்வுரிமை மறுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் அச்சத்தில் வாழ்கின்ற சூழ்நிலையை ஆளும் தரப்பு ஏற்படுத்தி உள்ளது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்தி தமிழ் மக்கள் தமது இருப்பைப் பாதுகாத்துக்கொண்டு கௌரவமாகவாழவேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்திய – இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு. அரசுத் தலைவர் தேர்தல், நாடாளுமன்றத்தேர்தல்களைஎதிர்கொள்ள இருக்கின்ற அரசுத் தலைவர் வேட்பாளரோ அல்லது ஏனைய அரசியல் கட்சிகளோ தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள விரும்பின், குறைந்தபட்சம் வடக்கு– – கிழக்கிற்கான மாகாண சபைகளுக்கான தேர்தல்களையாவது நடத்தி அதற்கான அதிகாரங்களை வழங்கி அந்த மாகாண நிர்வாகங்கள் திறம்படச் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும்” என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அதாவது அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் தமிழர்களின் ஆதரவைக் கோரும்போது, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதை ஒரு நிபந்தனையாகக் கட்சிகள் வைக்கவேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக இருக்கின்றது. இந்தக் கோரிக்கையை அரசுத் தலைவர் வேட்பாளர் எவராவது ஏற்றுக்கொண்டால்கூட தேர்தல் வெற்றியின் பின்னர் அதனை நிறைவேற்றுவார்களா என்பது சந்தேகம்தான். இதற்கான உடன்படிக்கை ஒன்றில் அவர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்தால்கூட நிறைவேற்றுவார்கள் என்று சொல்ல முடியாது.

அப்படித் தமிழர்களை ஏமாற்றிய நீண்ட நெடிய வரலாறு சிங்களத் தலைவர்களுக்கு உண்டு. எனவே மாகாண சபைத் தேர்தல் என்பது கானல் நீர்தான்.

# கணக்கெடுக்கப்படாத பெண்களின் உழைப்பு



ஊதியம் பெறாத வீட்டுப் பராமரிப்புப் பணி என்பது கண்ணுக்குத் தெரியாத ஆனால் சமுதாயத்திற்குள் நன்கு செயல்படும் அதன் இன்றியமையாத அங்கமாகும், இது பாரம்பரியமாக பெண்களால் செய்யப்படுகிறது. வீட்டில் நாளாந்த வேலைகளுடன், நோய்வாய்ப்பட்ட அல்லது விசேட தேவையுடைய குடும்ப உறுப்பினர்களைப் பராமரிப்பதும் இதில் அடங்கும். நாட்டின் பொருளாதாரத்திற்கு அவர்களின் முக்கியமான பங்களிப்பு இருந்தபோதிலும், பிரத்தியேகமாக ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளைச் செய்யும் பெண்கள் இலங்கை உட்பட பல நாடுகளில் தொழிலாளர் சக்தியாகக் கணக்கிடப்படவில்லை.

கொள்கை வகுப்பாளர்கள், பொருளாதார ஆய்வாளர்கள் மற்றும் பெரும்பாலான நன்கொடையாளர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இலங்கையில் பெண் தொழிலாளர் பங்கேற்பு குறைவாக இருப்பதாக தொடர்ந்து வாதிடும் சூழலே நிலவுகின்றது. குடும்பங்களில் பெண்கள் ஆற்றிவரும் சம்பளமற்ற வேலைகள் தொழில்களாகக் கணக்கில் எடுக்கப்படாமையின் காரணமகவே அப்படி இடம் பெறுகின்றது.

அண்மையில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கை ஒன் றில் இதைக் குறிப்பிட்டு, இலங்கையில் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணியின் நிலைமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது, வரலாற்று ரீதியாக, ஊதியம் பெறாத பராமரிப்பு பணி கொள்கை நிகழ்ச்சி நிரல்களில் இல்லாமல், உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களில் இருந்து விடுபட்டு, அதன் மூலம் தொழிலாளர் படையில் பெண்கள் பங்கேற்புக் குறைவு என்பது யதார்த்தத்தை மறைக்கிறது. ஊனமுற்றோர் மற்றும் தொடர்புடைய சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் தொடர்பான ஊதியம் பெறாத பராமரிப்புப் பணி பற்றிய பைலட் ஆய்வு என்ற தலைப்பில், மேனகா லேகாம்வாசம் என்பவரால் தொகுக்கப்பட்ட இந்த அறிக்கை, கடந்த வாரம் கொழும்பில் பெண்கள் மற்றும் ஊடகக் குழுவினால் வெளியிடப்பட்டது.

கொழும்பு, மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட வீட்டு மட்டத் தரவுகளைப் பயன்படுத்தி பெண் தொழிலாளர் பங்கேற்பில் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணியின் தாக்கத்தைப் படம்பிடிக்க இந்த ஆய்வு முயற்சித்தது. பராமரிப்பு தொடர்பான பணியின் சுமையை மறுபகிர்வு செய்தல் மற்றும் கவனிப்புச் சேவைகளை வழங் கும் அரசு நடத்தும் நிறுவனங்களில் அதிக முதலீட்டின் அவசியத்தை அங்கீகரிக்கும் ஒட்டுமொத்த சமூகப்பாதுகாப்புக்கொள்கையின் தேவை என்பவை பற்றி இந்த ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது.

அரசு மற்றும் தனியார் பராமரிப்பு சேவைகள் மற்றும் பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கான வசதிகள், கிடைப்பது, அணுகல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஆராய்வதற்காகவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்குக் கிடைக்கும் சமூகப் பாதுகாப்பு முன்முயற்சிகள் மற்றும் குறைபாடுகள் உள்ள குடும்ப உறுப்பினர்கள் தொடர்பாக பெண்களின் ஊதியம் பெறாத பராமரிப்பு வேலைகளில் இத்தகைய இருப்புகளின் தாக்கம் ஆகியவற்றைப் படம்பிடிப்பதையும் இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டிருந்தது.

இலங்கையில் உள்ள சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊனமுற்ற நபர்களின் கவனிப்பு தொடர்பான பிரச்சினைகளை எடுத்துரைப்பதில்லை. எனவே, அவர்களின் கவனிப்பு தனியார் கோளத்திற்குத் தள்ளப்படுகிறது, அதிகாரிகள் ஊனமுற்ற நபர்களின் சார்புநிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று அறிக்கை கூறியது, கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் (91.3%) பெண்களாக இருந்தனர், இது பெரும்பாலான கவனிப்பாளர்களைக் குறிக்கிறது. மாற்றுத்திறனாளிகள் பெண்கள் மற்றும் பதிலளித்தவர்களில் 66.3% சிங்களவர்கள், 28.8% தமிழர்கள் 5% முஸ்லிம்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள ஒட்டுமொத்த சனத்தொகையை இது பிரதிபலிக்கிறது.

பெரும்பாலான குடும்பங்களில் ஒட்டுமொத்தப் பெண்களே முதன்மையான பராமரிப்பாளர்களாக இருந்தாலும், நகர்ப்புற மற்றும் நகர சபை மற்றும் பிரதேச சபைப் பகுதிகளில் இருந்து பதிலளித்த ஆண்களின் சதவீதம் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களைவிட சற்று அதிகமாக இருப்பதாக அறிக்கை கூறுகிறது. இது, நகர்ப்புறங்களைச் சேர்ந்த அதிகமான ஆண்கள் ஒப்பிடும்போது, கவனிப்பு தொடர்பான பொறுப்புகளை மேற்கொள்வதைக் குறிக்கலாம், இது நகர்ப்புறவாசிகளின் பராமரிப்பு தொடர்பான பொறுப்புகள் உட்பட, அதிக காஸ்மோபாலிட்டன் அணுகுமுறைகளின் விளைவாக இருக்கலாம்.

வேலையில் ஈடுபட விரும்புகிறீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கு (65.6%) பேர் தற்போது வேலையில் இல்லை. வேலை செய்யாத பெரும்பாலானவர்கள் (66.7%) குறைபாடுகள் உள்ள குடும்ப உறுப்பினரை கவனித்துக் கொள்ள வேண்டியதன் காரணமாக வேலையில் ஈடுபட முடியவில்லை என்று கூறுகிறார்கள், அவர் பெரும்பாலும் குழந்தையாக இருக்கிறார். அவரது கவனிப்புப் பொறுப்புகள், அவர் ஊதியம் பெறும் வேலை ஒன்றில் ஈடுபடுவதற்கான திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை இது விளக்குகிறது என்று அறிக்கை கூறுகின்றது. பதிலளித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கு (67.5%) பெண்கள், தாங்கள் வேலையில் ஈடுபட விரும்புகின்றனள் எனவும், ஆனால் தற்போது வேலை செய்யவில்லை என்றும், கவனிப்பு தொடர்பான வேலையுடன் தொடர்புடைய பொறுப்புகளால் வேலைக்குப் போக முடியவில்லை என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பதிலளித்தவர்கள் வீட்டு உதவியாளர்களை பணியமர்த்துகிறார்களா என்று கேட்டபோது (தினமும் வாரந்தோறும் சில மணிநேரம் வரும் ஊதியம் பெறும் வீட்டு வேலையாட்கள் மற்றும் லைவ்-இன் வீட்டு வேலை செய்பவர்களும் அடங்குவர்), பதிலளித்தவர்களில் 18.8% பேர் மட்டுமே தாங்கள் வீட்டு வேலை செய்வதாக குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் அத்தகைய உதவியாளர்களை வேலைக்கு அமர்த்துவதில்லை. பதிலளித்தவர்கள் வீட்டு வேலை செய்பவர்கள் அனைவரும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் மற்றும் முஸ்லீம் பதிலளித்தவர்கள் எவரும் வீட்டு உதவியாளர்களை வேலைக்கு அமர்த்தவில்லை. பதிலளித்தவர்களில் பெரும்பாலோர் (96.5%) மாற்றுத்திறனாளிகளுக்கான அரச பராமரிப்பு மையங்கள் தங்கள் பகுதிகளில் இல்லை அல்லது அத்தகைய சேவைகள் அருகாமையில் கிடைப்பது குறித்து தங்களுக்குத் தெரியாது என்று கூறியுள்ளனர். அரச பராமரிப்பு சேவைகளைப் போலவே, 92.5% பேர் ஊனமுற்றோருக்கான தனியார் பராமரிப்பு மையங்கள் (சிவில் சமூக அமைப்புகள் போன்ற இலாப நோக்கற்ற நிறுவனங்கள் உட்பட) தங்கள் பகுதிகளில் இல்லை அல்லது அத்தகைய சேவைகள் கிடைப்பது குறித்து தங்களுக்குத் தெரியாது என்று கூறியுள்ளனர்.

மேலும், ஊதியமில்லாத கவனிப்பு வேலை காரணமாக நேர வறுமை (சார்ந்த குடும்ப உறுப்பினர்களைப் பராமரிப்பதில் செலவிடப்படும் நேரம் மற்றும் உழைப்பின் காரணமாக) பெண்கள் கூலிக்கும் செல்லமுடியாதுள்ளது. பெரும்பாலும் பொது மற்றும் பண்பாட்டு வாழ்க்கையில் அவர்கள் பங்கெடுப்பதற்கும் தடைவிதிக்கிறது என்று அறிக்கை மேலும் கூறியது. பராமரிப்பு தொடர்பான மற்றும் வீட்டுச் செயல்பாடுகளில் மற்ற வீட்டு உறுப்பினர்களின் பங்கேற்பானது, ஊதியம் செலுத்தப்படாத பராமரிப்பாளர்கள் மீது சுமத்தப்படும் பராமரிப்பு தொடர்பான சுமையைக் குறைக்கிறது.

இலங்கையில் மாற்றுத்திறனாளிகளின் கவனிப்பு தனியார் துறைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், ஊனமுற்றவர்களின் சார்புநிலைக்கு அதிகாரிகள் முக்கியத்துவம் அளித்து வருவதால், மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு மற்றும் உதவிகளை வழங்குவதற்கு குடும்பங்கள் அழைக்கப்படுகின்றனர் என்றும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இது, குடும்பங்கள் மீதான பராமரிப்பு தொடர்பான சுமையை அதிகரித்துள்ளதாக அறிக்கை மேலும் கூறியுள்ளது.

ஊனமுற்ற குடும்ப உறுப்பினர்களை பராமரிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது, குடும்பத்திற்குள் ஊதியம் இல்லாத பராமரிப்பு வேலைகளில் பெண்களுக்கு ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. அதாவது 30-39 வயதிற்குட்பட்ட பெண்கள், இவ்வாறு சம்பளமற்ற குடும்ப பராமரிப்பாளர்களாகப் பணியாற்றுவது மிகக் குறைவாகவே இருக்கின்றது. இந்த வயதுப் பிரிவினர் தேசிய தொழிலாளர் பங்கேற்பு புள்ளிவிவரங்களில் அதிகளவில் உள்வாங்கப்படுவதால் அந்த நிலை இருக்கலாம் என்று அறிக்கை கூறியது. இந்த வயதெல்லைக்கு அப்பாலும் பலருக்கு ஊதியம் பெறும் வேலையில்

(8ஆம் பக்கம் பார்க்க..)

# கட்சியின் மொத்த கட்டுப்பாட்டையும் தனது பிடிக்குள் கொண்டுவர சூழ்ச்சி

## எம்.ஏ.சுமந்திரனை வைகிறார் தவராசா

அரசியல் ரீதியில் இரா. சம்பந்தனை ஓரங்கட்டிவிட்டு கட்சியின் மொத்தக் கட்டுப்பாட்டையும் தனது பிடிக்குள் கொண்டுவர நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சூழ்ச்சிசெய்கிறார் என சட்டத்தரணி கே.வி.தவராசா குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கடிதமொன்றை எழுதியுள்ள அவர், உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்பு மனுக் கோரப்பட்டபோது, சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்து தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்தினார் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால் அரசியலை விட்டும் விலகப் போவதாகக் கூறிய சுமந்திரன், தற்போது உங்களைப் பதவிவிலகச் சொல்வது வேடிக்கையானது என்றும் கே.வி.தவராசா, சம்பந்தனிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை சுமந்திரன் திட்டமிட்டு சிதறடித்தமையின் நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து உங்களைத் தூக்கியெறிவதே என்றும் கே.வி.தவராசா சுட்டிக் காட்டியுள்ளார். ஆகவே உடனடியாகக் கட்சியை மீட்டு தமிழ்த் தேசியத் தின் கனவுகளைச் சுமந்த மக்க ளின் அபிமானமிக்க தமிழ்த் தேசியவாதி ஒருவரைக் கொண்டு தலைமைத்துவத்தைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அதை செய்யாமல்விட்டால் அது இனத்துக்கு இழைக்கப்படும் வரலாற்றுத் துரோகம் என்றும் கூறியுள்ளார். (05)

# யாழ். போதனா வைத்தியசாலையில் அனைத்து வகை குருதிக்கும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்கள், சத்திரசிகிச்சைகள், குருதிச்சோகை நோயாளர்கள், புற்றுநோயாளர்கள் மற்றும் குருதி தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வைத்தியசாலையில் அதிகரித்து செல்கின்றதால் இரத்த வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற குருதியின் அளவும் கூடிக் கொண்டே செல்வதாக இரத்த வங்கியினர் தெரிவிக்கின்றனர்.

பல இடங்களுக்குச் சென்று குருதியை சேகரித்தாலும் குறிப்பிட்ட சில காலங்களில் குருதியின் கையிருப்பு குறைந்தளவிலேயே காணப்படுகின்றதாக கூறியுள்ளனர்.

சாதாரணமாக, இரத்த வங்கியில் 330 பைந்த் குருதி குறையாமல் இருக்க வேண்டும். அனால் தற்போது இருக்கும் குருதியின் அளவு 238 பைந்த் என்பதோடு இது ஆபத்தான நிலையாகும்.

இதனால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த நிலைமையை கவனத்தில் கொண்டு பொது மக்கள் இரத்ததானம் செய்வதற்கு முன்வருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (05)

# காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கக் கூட்டத்தில் கைகலப்பு

## வவுனியாவில் 7 பேர் கைது

வவுனியாவில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க கூட்டத்தில் ஏற்பட்ட கைகலப்பு தொடர்பாக 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அண்மையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றிருந்ததுடன் அதில் இருந்த ஒரு பகுதியினர் அதில் இருந்து வெளியேறியிருந்தனர்.

இந்நிலையில் வெளியேறிய அணியினரை வைத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வவுனியா மாவட்டத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு ஒன்றை மேற்கொள்வதற்காக கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கூட்டத்திற்கு வருகை தந்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர்கள் மற்றும் வவுனியாவில் அண்மையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. இதனையடுத்து பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக முறையிடப்பட்டது.

இதன்போது வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி யோகராசா கனகரஞ்சினி, செயலாளர் ஆனந்தன் நடராஜா லீலாதேவி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சபிதா ராஸ்திரி, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான சண்முகராசா சறோஜினிதேவி சிவாநந்தன், ஜெனிற்றா செல்லத்துரை கமலா பேரின்பராசா பாலேஸ்வரி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். (05)





குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Cocacola M
Pepsi M
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய நல்லிணக்கத்தைச் சிதைக்கும் அம்பிட்டிய தேரர் போன்ற பிரகிருதிகளின் செயற்பாட்டை கட்டுப்படுத்துக

## அமைச்சர் டக்ளஸ்ம் காட்டம்



தேசிய நல்லிணக்கத்தைச் சிதைக்கும் வகையிலான எகத்தாளப் பேச்சுக்களும் சண்டித்தனங்களும் சட்ட ரீதியாக தண்டிக்கப் படவேண்டும்என்றுவலியுறுத்தியுள்ளஅமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, தர்மத்தை போதிக்க வேண்டிய சிலரின் தரம் கெட்ட வார்த்தைகளும் செயற்பாடுகளும் வேதனையளிக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தன தேரரின் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

துரதிஸ்டவசமாக இந்நாட்டிலே இவ்வாறான பிரகிருதிகள் அனைத்து தரப்பிலும் இருந்திருக்கின்றனர், இருக்கின்றனர் என்பது வேதனைமிகு யதார்த்தமாக இருக்கின்றது.

இந்த நாடு இன்றளவும் மீள முடியாமல் தவிப்பதற்கு பிரதான காரணமாகஇருக்கின்றகடந்தகால யுத்தம் தோன்றுவதற்கு இரண்டு தரப்பிலும் இருந்த இவ்வாறான பிரகிருதிகளின் கருத்துக்களும் செயற்பாடுகளுமே காரணமாக இருந்தன என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அதேபோன்று உலகிற்கு சாந்தியையும் சமாதானத்தையும் போதிக்க வேண்டியவர்களின் இவ்வாறான தரங்கெட்ட செயற்பாடுகள் தொடர்பில் மரியாதைக்குரிய பௌத்த பீடங்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

இந்த நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும். காவி உடை கவசமாகப் பயன்படுத்தப்படுவதை சட்டத்தை பாதுகாக்க வேண்டிய தரப்புக்கள் அனுமதிக்கக் கூடாது.

மதகுரு என்று சொல்லப்படுகின்ற குறித்த நபரின் செயற்பாடுகள் மற்றும் பின்னணிகள் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன.

இவை அனைத்தும் விரிவாக ஆராய்ந்து விக் கிருமிகள் அனைத்தும் களையப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

இதுதொடர்பாக, எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளதுடன் அமைச்சரவையிலும் பிரஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

யதார்த்தைப் புரிந்து கொண்டு ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையிலான எமது அரசாங்கம் விரைவில் இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (05)

# யாழிலுள்ள மதுபானசாலைகள் பற்றிய விவரங்கள் தகவலறியும் சட்டமூலமூடாக கேட்டும் பதிலில்லை

## சிறிதரன் குற்றச்சாட்டு



யாழ்.மாவட்டத்தில் எத்தனை மதுபானசாலைகள் உள்ளன என தகவலறியும் சட்டமூலம் ஊடாக கேட்டும் பதில் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றச்சாட்டியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றபோது மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் கலந்துரையாடப்பட்டவேளை அவர் இதனைத் தெரிவித்தார் .

மதுவரிதிணைக்களத்தின்செயற்பாடுகள் செயலற்று இருக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்கள்.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் உடுப்பிட்டியில் சட்டவிரோதமாகவீடுஒன்றில்மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பொதுமக்களால் பொலஸாரிடமும் தெரியப்படுத்தியதாக கூறுகிறார்கள் எனினும் நடவடிக்கை எதுவுமில்லை எனத் தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தகவலறியும் சட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் மதுபான நிலையங்கள் தொடர்பாக முழுமையான விவரங்களை கேட்டபோதும் ஒன்றரை மாதமாகியும் கிடைக்கவில்லை.

அதேவேளை வடக்கு மாகாண ஆளுநர் சட்டவிரோத மதுபானசாலைகளுக்குஎதிராக நடவடிக்கை எடுக்காது விட்டால் அரசாங்கத்திற்கு பண இழப்பு ஏற்படுகின்றது. எனவே உரியஒழுங்குநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட வேண்டும். - என்றார். (05)

# 10 வயது சிறுவனுக்கு மதுபானத்தை அருந்த கொடுத்தவர் யாழில் கைது

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவடி பகுதியில், 10 வயதுச் சிறுவனுக்கு மதுபானத்தை அருந்த கொடுத்த ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் –

குறித்த சந்தேகநபர் வெள்ளிக் கிழமை ஓட்டோவில் வைத்து சிறு வனுக்கு மதுபானத்தை அருந்தக் கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் சிறுவனின் தாயார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் மேற்படி சந்தேகநபர் வெள்ளி இரவு சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். சிறுவனின் தந்தை வேலை நிமித்த மாக வெளிநாட்டில் வசித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

(05)




## கடல் ஆய்வில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துவிட்டது.

சீனக் கப்பல் இலங்கைக் கடல் எல்லைக்குள் ஆய்வில் ஈடுபடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு தனது அனுமதியை வழங்கிய தகவலை அயலுறவுத்துறை அமைச்சு ஷி யான் 6 இடம் தெரிவித்தைத் தொடர்ந்து இன்று முதல் அந்தக் கப்பல் தனது ஆய்வைத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் இலங்கை கடல் வள ஆய்வு நிறுவனமான நாராவைச் சேர்ந்த நால்வர் மற்றும் கடற்படையைச் சேர்ந்த இருவர் என 6 பேர் செல்வதற்கு மட்டுமே சீனா அனுமதி வழங்கியுள்ளது. எனினும் 7 பேரை கப்பலில் பயணிக்க அனுமதிக்குமாறு ஆளும்தரப்பில் கேட்கப்பட்டிருந்தது. ஏழாவது நபபராக றுகுணு பல்கலைக்கழககடல்சார்பேராசிரியர் ஒருவரையும் கப்பலில் ஏற்றுமாறு முன்னதாக இலங்கைத் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்குச் சீனத் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. பின்னர் றுகுணு பேராசிரியர் ஆய்வில் கலந்துகொள்ளவில்லை என்று அறிவித்ததைத் தொடர்ந்து அந்தக் கோரிக்கை கைவிடப்பட்டது.

## ஜப்பானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டிருக்கும் காலப்பகுதியில் இருநாட்டு கடற்படையினருக்கும் இடையில்நட்புறவைமேம்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளது.

குறித்த கப்பல் இலங்கை கடற்படைக்கப்பலுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபடவுள்ளதோடு, எதிர்வரும்31ஆம்திகதிநாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எல்லை தாண்டிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார்கடற்பரப்பிற்குள்கடந்த 15ஆம் திகதி எல்லை தாண்டிய 3 படகுகளில் பயணித்த 15 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் இருக்கின்றனர்.

## யானை தாக்கி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயம்அதிகாலைஒருமணியளவில் யானை வயலில் புகுந்துள்ளது. அதனை விரட்டும் நோக்கில் ஒலி எழுப்பியுள்ளார். இருந்தபோதும் யானை காவலில் இருந்தவரை நெருங்கியுள்ளது.

தப்பியோட முயன்றவரை தும்பிக்கையால்தூக்கிஅடித்துள்ளது. இதனால் கால், கை மற்றும் இடுப்பு பகுதிகளில்அவர்படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் எழுப்பிய அவலக்குரலையடுத்துஒன்றுகூடிய உறவுகள் படுகாயமடைந்தவரை உடனடியாக மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

## போராட்டக்காரர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதோடு இந்த சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## துறைமுக நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுங்கத்தீர்வையற்ற சில்லறை வர்த்தக நிலையங்களை நடத்திச்செல்வதற்கு முதலீட்டாளரினால் குறைந்தபட்சம் 05 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட வேண்டும்.

குறித்த முதலீட்டாளருக்கு சுங்கத்தீர்வையற்ற வர்த்தகம் தொடர்பில் சர்வதேச ரீதியிலான அனுபவம் காணப்பட வேண்டும்.

அத்துடன், சுங்கத்தீர்வையற்ற வர்த்தக நிலையத் தொகுதிகளை நடத்திச்செல்வதற்கு முதலீட்டாளரினால் குறைந்தபட்சம் 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது.

## நிதியில்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல்களும் 2025ஆம் ஆண்டில் நடைபெறும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக மாகாணசபைத்தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்கான எல்லை மீள் நிர்ணயங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக அது ஒத்திவைக்கப் பட்டதாகவும் மீள்நிர்ணயம் செய்த பின்பு தேர்தல்கள் நடைபெறும் என்றும் பேசப்பட்டாலும் எல்லைகளை மீளவும் திருத்திக்கொள்வதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மாகாண தேர்தல்சட்டதிட்டங்களுக்குஇணங்க மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும்படி தமிழர் தரப்பு கோரிய பொழுதும் அதற்கான எத்தகைய நடவடிக்கைகளையும் ஆளும் தரப்புகள் மேற்கொள்ளவில்லை.

மாறாக, வடக்கு-கிழக்கில் தான் விரும்பிய ஆளுநர்களை நியமித்து, தான்தோன்றித்தனமான முறையில் பௌத்த பிக்குகளும் இராணுவமும் பொலிசாரும் கூட்டாக காணிகளைக் கபளீகரம் செய்வதும் அத்தகைய இடங்களில் புதிது புதிதாக புத்த கோயில்களைக் கட்டுவதும் எங்கோ தூரப் பிரதேசங்களில் உள்ள சிங்கள மக்களைக் கொண்டுவந்து இங்கு குடியேற்றுவதுமாக ஆளும் தரப்புத் தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கின்றது.

இந்திய-இலங்கைஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சி முறைக்குள் அதிகார பரவலாக்கத்தின் ஊடாக மாகாணசபை முறைமை ஒன்று உருவாக்கப்பட்டது. வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறைமை இல்லா விட்டாலும்கூட, அதுவே இந்த அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகவும் இருக்கின்றது. அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்காக அரசமைப்பில் பதின்மூன்றாவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரத்தில் இல்லாத காலத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாகவும் ஏனைய வழிமுறைகளிலும் மாகாணத்திற்கு உரித்தான பல அதிகாரங்களை மத்திய ஆளுரம் தரப்பு மீளப்பறித்துக்கொண்டது. இன்றும் அது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதனூடாக மாகாணசபை ஒரு அர்த்தமற்ற நிர்வாக அலகாக மாற்றப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, வாழ்வுரிமை மறுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் அச்சத்தில்வாழ்கின்றசூழ்நிலையை ஆளும் தரப்பு ஏற்படுத்தி உள்ளது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்தி தமிழ் மக்கள் தமது இருப்பைப் பாதுகாத்துக்கொண்டு கௌரவமாக வாழ வேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. பதின்மூன்றாவதுதிருத்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால்இன்றுமாகாணசபைக்கான தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்து அதே சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை ஆளும் தரப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

அடுத்த ஆண்டு. ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களை எதிர்கொள்ள இருக்கின்ற ஜனாதிபதியோ அல்லது ஏனைய அரசியல்கட்சிகளோதமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள விரும்பின், குறைந்தபட்சம் வடக்கு- - கிழக்கிற்கான மாகாண சபைகளுக்கான தேர்தல்களை யாவது நடத்தி அதற்கான அதிகாரங்களை வழங்கி அந்த மாகாண நிர்வாகங்கள் திறம்பட செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

சர்வதேசகடன்களைமீளச்செலுத்துவதற்கான காலங்கள் மாற்றியமைக்கப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் தேர்தல்களுக்கான நிதி இல்லை என்று கூற முடியாது. ஆகவே, ஏனைய தேர்தல்களுக்கு முன்பாகக் குறைந்தபட்சம் வடக்கு -கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களையாவது உடனடியாக நடத்தமுன்வரவேண்டும்என்றுதமிழ் மக்கள் சார்பாக ஆட்சியாளர்களிடம் வலியுறுத்துகின்றோம்-என்றுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# பம்பலபிட்டி ரயில் நிலையத்துக்கு தற்காலிக நுழைவுப்பாதை அமைப்பு







இலங்கையில் சுமார் 30 வருடகால பழமையான பாலங்கள் இருக்கின்றன என வீதி அபிவிருத்தி அதிகாரசபை மதிப்பிட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பணிப்புரைக்கு அமைய கொழும்பு பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திற்கு 10 நாள்களுக்குள் தற்காலிக நுழைவுப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. (05)

## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி 21 லட்சம் ரூபா மோசடி: பல்கலை உத்தியோகத்தரும் கணவரும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞனை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புவதாககூறி 21லட்சம் ரூபா பண மோசடி செய்த பல்கலைக்கழக உத்தியோகத்தரும், அவரது கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் வியாழக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து, சந்தேக நபர்களை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

தென் பகுதியில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தராக கடமையாற்றும் பெண் ஒருவர், யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞனை கனடா நாட்டுக்கு அனுப்புவதாககூறி, 21லட்சம்ரூபா பணத்தை மோசடி செய்துள்ளார்.

அது தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரிடம் முறையிட்டதையடுத்து, முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபரான பெண்ணைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இந்த மோசடி சம்பவத்துடன் பெண்ணின் கணவருக்கும் தொடர்பு இருக்கின்றமை தெரியவர, கணவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்தே விளக்கமறியலில்வைக்கஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (05)

## தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பம்






உயர் பாதுகாப்பு வலயத்தின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை, தையிட்டி பகுதியில் மக்களது காணிகளை சுவீகரித்து சட்டவிரோத திஸ்ஸ விகாரையானது அமைக்கப்பட்டது.

இந்த விகாரைக்கு காணியின் உரிமையாளர்கள் உட்பட பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின.

இந்நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் குறித்த விகாரையில் போயா தினமான நேற்று வழிபாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் வெள்ளிக்கிழமை போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். (05)

## ‘டக் டிக் டோஸ்’ இசை வெளியீடு



‘டக் டிக் டோஸ் ’ முழு நீள திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணகலாசாரமண்டபத்தில்இடம்பெற்றது.

இலங்கையைச்சேர்ந்தபிரபலஇயக்குநரான ’ராஜ் சிவராஜின் இயக்கத்தில், பூவன் மதீசனின் இசையமைப்பில் உருவாகியுள்ள இத் திரைப்படம் மிக விரைவில் திரைக்கு வரவுள்ளது.

இதற்கு முன்னர் இவர்களது கூட்டணியில் வெளியான ’புத்தி கெட்ட மனிதர்கள் எல்லாம்’ என்ற திரைப்படம் பலரின் பாராட்டுக்களை பெற்றிருந்ததோடு, வணிக ரீதியாகவும் வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், மீண்டும் இவர்களின் கூட்டணியில் வெளியாகவுள்ள ’டக் டிக் டோஸ்’ திரைப்படத்திற்கு மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## மன்னாரில் 315 ஜெலட்னைட் குச்சிகளுடன் ஒருவர் கைது



மன்னார் பிரதான தபாலக வீதியில் வைத்து ஒரு தொகுதி ஜெலட்னைட் (டைனமெட்) குச்சிகளுடன் வெள்ளிக்கிழமை மதியம் ஒருவர் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனவும் அவரிடம் இருந்து 315 ஜெலட்னைட் (டைனமெட்) குச்சிகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வு பிரிவின் தகவல்க ளுக்கு அமைய மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக செயற்பட்ட மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் குறித்த நபரை கைது செய்ததோடு ஜெலட்னைட் (டைனமெட்) குச்சிகளையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபரிடம் மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். விசாரணையின் பின் மீட்கப்பட்ட ஜெலட்னைட் (டைனமெட்) குச்சிகள் மற்றும் கைதுசெய்யப்பட்ட நபர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## பாலஸ்தீனியர்களுக்காக கல்முனை மக்கள் ஆதரவு



இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் தீவிரமாகப் போர் இடம்பெற்று வரும் நிலையில், பாலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனையில் வெள்ளிக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளி வாசலுக்கு அருகேயே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அப்பகுதி மக்களால் துஆ பிரார்த்தனையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குக

## பொலிஸ் தலைமையகத்தில் அமைச்சர் ஜீவன் முறைப்பாடு



இனவாதத்துக்கு தூபமிடும் வகையில்செயற்படும்மட்டக்களப்பு, அம்பிட்டியசுமணரத்னதேரருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின்பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திலும் அமைச்சர் முறைப்பாடு முன்வைத்துள்ளார்.

அதேபோல குறித்த தேரரின் கடந்தகால செயற்பாடுகள் இன மோதலை ஏற்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளதால் அது தொடர்பில் உரிய வகையில் விசாரணை நடத்தி பாதுகாப்புஅமைச்சர்என்றவகையில் ஜனாதிபதிக்கும், பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சருக்கும், தனக்கும் அறிக்கையொன்றைவழங்குமாறும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில்கருத்துவெளியிட்ட அவர் கூறியவை வருமாறு -

தமிழ் மக்களை இலக்கு வைத்து அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் வெளியிட்டுள்ள கருத்துகள் இனக்குரோதத்தை விதைக்கும் வகையில்உள்ளதுடன்,அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும்நல்லிணக்க முயற்சிகளை சீர்குலைக்கும் வகையிலும் அமைந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்றால் எமது நாட்டு பொருளாதாரம் சரிந்தது, அதன்பின்னர் அரசியல் குழப்பத்தால் அதலபாதாளத்திலேயே விழுந்தது. எனவே, அனைவரும் இணைந்து செயற்பட்டால்தான் இந்நாட்டை கட்டியெழுப்பலாம். நாட்டில் முன்னேற்றத்துக்கு இன, மத நல்லிணக்கம் மிக முக்கியம்.

இந்நிலையில், இனவாதம் கக்கி, இன முறுகலை ஏற்படுத்தும் வகையில் குறித்த தேரர் செயற்பட்டு வருகின்றார். கருத்து சுதந்திரம் என்ற போர்வையில்அவர்சட்டத்தைகையில் எடுத்துசெயற்பட முற்படுகின்றார். எனவே,அவருக்குஎதிராகநடவடிக்கை எடுக்கப்படவேண்டும். - என்றார். (05)



# இரு உணவகங்களுக்கு யாழ்ப்பாணத்தில் 'சீல்'

யாழ்ப்பாணம் மாநகரில் சுகாதார சீர்கேடு நிறைந்து காணப்பட்ட உணவகமும் சுகாதார பிரிவினரின் அனுமதி பெறாது இயங்கிய உணவகமும் நீதிமன்ற கட்டளையில் சீல் செய்யப்பட்டு மூடப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர் ஆரியகுளம் சந்தி பகுதியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்தில் வாடிக்கையாளர் ஒருவருக்கு புழுவுடன் உணவு வழங்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணி மனையினரிற்கு அறிவித்தார். விசாரணைகளை முன்னைடுத்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மாநகர சுகாதார பிரிவினரால் குறித்த உணவகம் பரிசோதிக்கப்பட்டது. உணவகத்தில் சுகாதார சீர்கேடுகளை சீர் செய்ய அறிவுத்தல் வழங்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை மீண்டும் யாழ்ப்பாணம் மாநகர பொது சுகாதார பரிசோதகர் லயன் பா.சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால்குறித்தஉணவகம் பரிசோதனை செய்யப்பட்டது.

இதன்போதுசுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்எவையும்நிவர்த்தி செய்யப்படாமலே காணப்பட்டது.

அதனால் பொதுச் சுகாதார சட்ட விதிகளின் கீழ் அந்த உணவகத்தின் உரிமையாளர் மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரில் உரிய அனுமதி பெறப்படாமல் இயங்கியமற்றோர்உணவகமும் பரிசோதிக்கப்பட்டது. அது தொடர்பிலும் வழக்குத் தொடரப்பட்டது.

02 உணவகங்களிற்கும் எதிரான வழக்குகள் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தன.

உணவகங்களின் குறைபாடுகள் சீர் செய்யப்பட்டு உரிய அனுமதியளிக்கும் வரை அவற்றை சீல் செய்து வியாபார நடவடிக்கையை இடைநிறுத்த மன்றில் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது.

விண்ணப்பத்தை ஆராய்ந்த மேலதிக நீதிவான் இரண்டு உணவகங்களையும்சீல்வைத்து மூடுமாறு பொது சுகாதாரப் பரிசோதகரிற்கு கட்டளையிட்டார்.

பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் குறித்த இரு உணவகங்களும் சீல் வைத்து மூடப்பட்டன. (05)

# நண்பியின் திருமண விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட யுவதி திடீர் உயிரிழப்பு

நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட இளம் யுவதியொருவர் திடீரென சுகவீனமடைந்த நிலையில் வெள்ளிக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

புத்தளம், ஆனமடுவ - தசநாயக்க புரத்தைச் சேர்ந்த 20 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் புத்தளம் பொலிஸார்தெரிவித்தனர். புத்தளத்தில் உள்ள தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வியாழக்கிழமை இரவு புத்தளத்திற்கு குறித்த யுவதி வருகை தந்துள்ளார்.

திருமணநிகழ்வில்கலந்துகொண்ட யுவதி, திருமண விருந்தை அருந்திய பின்னர் தனது உடல்நிலை சரியில்லை எனவும் உடனடியாக தான் வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனவும் நண்பியிடம் கூறிவிட்டு, அங்கிருந்து ஓட்டோ ஒன்றில் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு ஓட்டோவில் சென்று கொண்டிருக்கும் போது குறித்த யுவதி திடீரெனசுகவீனமடைந்ததுடன், அவர் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட குறித்த யுவதிக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அந்த யுவதி வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் மீதான மரண விசாரணை, பிரேத பரிசோதனையின் பின்னர், சடலம் குடும்பத்தினரிடம்ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த யுவதியின் உடல் பாகங்கள் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளநிலையில், அதன்விபரங்கள்வெளிவந்தபின்னரே மரணத்திற்கான காரணத்தை அறிந்துகொள்ள முடியும் என திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வீதியின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியில் மோதி இளைஞன் சாவு

வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் பாரவூர்தியின் பின்புறம் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பொரளை -கொடகம பனாகொட வீதியில் நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

ஹோமாகம பிரதேசத்தில் வசிக்கும் 20 வயதுடைய இளைஞனே இந்த சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் அத்துருகிரிய பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மொரட்டுவை ஆற்றிலிருந்து இனந்தெரியாத சடலம் மீட்பு

அடையாளம் காணப்படாத ஒருவரின் சடலம் வெள்ளிக்கிழமை காலை மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொரட்டுவை பீரிஸ் மாவத்தை பகுதியில் உள்ள பொல்கொடஆற்றிலிருந்துமீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் யார் என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனத்;தெரிவிக்கும்பொலிஸார், சடலம் குறித்த விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், உயிரிழந்தவர் சுமார் 5 அடி உயரமும் மெல்லிய உடல்வாகும் கொண்டவர் எனவும் கறுப்பு நிற காற்சட்டையும் பழுப்பு நிற ரி-சேர்ட்டும் அணிந்துள்ளார் எனவும் அவரது முழங்கையோடு வலது கை துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான நீதிவான் விசாரணைகளின் பின்னர், களுபோவில வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (05)

# டெங்கு அபாய வலய எண்ணிக்கை எகிறல்

*டெங்குஅபாயவலயங்களின்எண்ணிக்கை நாடளாவியரீதியில்24ஆகஅதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.*

*இதனால், எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக அதன் பணிப்பாளர் வைத்தியர் நளின ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.*

*நாட்டில் தற்போது மழைகாலம் நிலவுவதால் டெங்கு நோய் அதிகமாக பரவக்கூடும் நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)*

# கணக்கெடுக்கப்படாத பெண்களின் உழைப்பு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆர்வம் இருந்தபோதிலும் பணிச்சுமை காரணமாக அவர்கள் தடுக்கப்படுகிறார்கள், ஏனெனில் அவர்களின் ஊதியம் இல்லாத, பெரும்பாலும் குழந்தைகள் தொடர்பான பராமரிப்பு வேலைப் பொறுப்புகளைப் பதிலளித்தவர்கள் இதில் உள்ளடக்கவில்லை. மேலும் கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களில் பெரும்பாலானவர்களின் குடும்ப வருமானம் கணிசமாக வறுமைக் கோட்டிற்குக் கீழேயே இருந்தது.

குடும்பத்தில் உள்ள பெரும்பான்மையான மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் வேலைகள் அனைத்திற்கும் உதவி தேவைப்படுகிறது, ஆனால் குடும்ப வருமானத்தின் கட்டுப்பாடுகளின் வெளிச்சத்தில் ஊதியம் பெற்ற பராமரிப்பாளர்களும் வீட்டு உதவியும் சாத்தியமில்லை என்பதால், ஊதியம் பெறாத பராமரிப்பாளரின் சுமை கணிசமாக அதிகரித்துள்ளது. ஆய்வு கண்டுபிடிப்புகள் அரச மற்றும் தனியார் பராமரிப்பு சேவைகள் இரண்டும் கிடைக்கவில்லை அல்லது பெரும்பாலான பயனர்கள் அத்தகைய சேவைகள் கிடைப்பது பற்றி அறிந்திருக்கவில்லை என்று கூறுகின்றது. இதுபோன்ற சேவைகள் குறித்து தங்களுக்குத் தெரியும் என்று கூறிய சிறுபான்மையினரில், பெரும்பாலானோர்கூட அத்தகைய சேவைகளைப் பெறவில்லை. ஏனெனில் அவர்கள் மாற்றுத்திறனாளிகளை கவனித்துக்கொள்வதற்காக வீட்டிலேயே தங்கியிருக்கிறார்கள். இதனால் தொழிலாளர் சக்தியையும் தங்களையும் இழக்கிறார்கள். ஆனால் அவர்களின் உழைப்பு கணக்கில் எடுக்கப்படுவதில்லை. ஆய்வில் பதிலளித்தவர்களில் சிலர் சம்பந்தப்பட்ட செலவுகள் காரணமாக இந்த சேவைகளைப் பயன்படுத்தவில்லை. குறைபாடுகள் உள்ள குழந்தைகளை ஏற்றுக்கொள்ளும் பாலர் பள்ளிகள் பராமரிப்பு தொடர்பான சேவையின்மிகவும்பரவலாககிடைக்கக்கூடிய வடிவமாக இருப்பதால் அவற்றைப் பலர் பயன்படுத்துகிறார்கள். இது அத்தகைய பதிலளித்தவர்களின் ஊதியம் பெறாத பராமரிப்பு வேலை தொடர்பான சுமை மற்றும் அவர்களின் தொழிலாளர் பங்கேற்பின் மீது நேர்மறையானதாக்கத்தைஏற்படுத்தக்கூடும்.

ஆய்வின் கண்டுபிடிப்புகளின்படி, ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளில் ஈடுபடும் பெண்களின் உழைப்புப் பங்கேற்பில் நேர வறுமை முக்கிய தடைகளில் ஒன்றாகச் செயல்படுகிறது, இந்தச் சூழலில் பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் கவனிப்புடன் கூடுதலாக பல்வேறு வீட்டுவேலைகளில் ஈடுபட்டுள்ளனர். குறைபாடுகள் உள்ள நபர்களுக்கு. மற்ற வீட்டு உறுப்பினர்கள் வீட்டு வேலைகள் மற்றும் கவனிப்பு வேலைகளில் குறிப்பிட்ட அளவிற்கு பங்களித்தாலும், பெரும்பாலான வேலைகளின் செயல்திறனுக்குப் பதிலளித்தவர்களும் முதன்மையான பொறுப்பாளிகள். இதன் விளைவாக, சராசரியாக, மாற்றுத்திறனாளிகளை கவனித்துக்கொள்வதற்கும் (10 மணி நேரம்), சமைப்பதற்கும் (2.5 மணிநேரம்), துணி துவைப்பதற்கும், வீட்டை சுத்தம் செய்வதற்கும் (மூன்று மணிநேரம்) கணிசமான நேரம் செலவிடப்படுகிறது, இது ஒருவர் சட்டப்பூர்வமாக உழைப்பதற்குச் செலவிடும்நேரத்தை விட அதிகமாகும்.

ஊதியம் பெறும் வேலைக்கு அனுமதிக்கப்பட்ட எட்டு மணிநேர வரம்பையும் தாண்டியது இது. அதிகமான ஆண் பதிலளிப்பவர்கள் வீட்டு வேலைகள் மற்றும் ஊதியம் பெறாத பராமரிப்பு வேலை ஆகிய இரண்டிற்கும் குடும்பத்தின்வேறு உறுப்பினர்களிடமிருந்து உதவி பெறுவதைக் காண முடிந்தது. இது சமூகத்தில் வேரூன்றிய பாலின வேறுபாடுகள்மற்றும் தொழிலாளர் பிரிவினையின் யதார்த்தத்தைச் சுட்டிக் காட்டுகின்றதுஎன்று ஆய்வு கூறுகின்றது. இந்த ஆய்வு, ஊதியம் பெறாத பராமரிப்பு வேலைகளை உதவி தேவையில்லாத பெண்களின் தனிச்சிறப்பாகக் கருதுகிறது.

பதிலளித்தவர்களில் 83.8% பேர் அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களால் பயனடைந்துள்ளனர் என்று அறிக்கை விளக்கியது: 72.1% பேர் அரச ஊனமுற்றோர் உதவித்தொகையைப் பெறுகின்றனர், சில குடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களிலிருந்தும் உதவி பெறுகின்றன. ஆனால் இந்த உதவிகள் ஊதியம்பெறாதபராமரிப்பாளர்களின்தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதல்ல. இந்தத் திட்டங்களைப் பெறுபவர்களுக்கு, பணம் செலுத்துவதில் தாமதம் மற்றும் பணம் வசூலிக்க போக்குவரத்துச் செலவுகள் உட்பட, நிதியைப் பெறுவதில் பல்வேறு தடைகள் உள்ளன. எனவே அவர்களின் பராமரிப்பு தொடர்பான சுமையைக் குறைப்பதற்கும் பொருளாதாரம் மற்றும் அவர்களின் சொந்த நலனுக்கும்பங்களிப்பதற்கும் ஊதியம்பெறாத பராமரிப்புப் பணிகளைச் செய்யும் வறிய பின்னணியைச் சேர்ந்த பெண்களுக்குப் போதுமான சமூகப் பாதுகாப்புப் பலன்கள் அவசியம் என்கிறது ஆய்வு முடிவுகள்.

மேலும், பெண்கள் மீது சுமத்தப்படும் இந்த அதிகப்படியான பராமரிப்பாளர் தொடர்பான சுமையை குறைப்பதில் பாதுகாப்பான மற்றும் மலிவு விலையில் பராமரிப்பு சேவைகளை அணுகுவது மிக முக்கியமானது. வறுமையின் சுழற்சியை உடைக்க சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களும்வலுப்படுத்தப்படவேண்டும்மற்றும் ஊனமுற்றோர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு பெண்களின் ஊதியமற்ற பராமரிப்பு தொடர்பான சுமையை நிவர்த்தி செய்வதில் உதவி வழங்க வேண்டும் என்று அறிக்கை கூறுகிறது.

மூலம்: தி மோர்னிங்

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 29th October 2023

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## Read the following passage and Answer: the question that follows.



One day the deer saw a new fruit. They were yellow mangoes. The trees, across the river, were full of yellow, ripe mangoes. He wanted to eat the mangoes. He went to the riverbank, to see how to cross it. Oh, no! There was no bridge! And if he swam, the crocodiles in the river, would eat him up.

Answer the questions given below.

Q. What was the new fruit that the deer saw?
A. ----------------------------------------------------------------------------
Q. Where were the mango trees?
A. Across the ------------------------------------------------------------
Q. Where did the deer go to see how to cross the river?
A. To the -------------------------------------------------------------
Q. What animals were in the river?
A. ----------------------------------------------------------------------------



### Read the comprehensions and answer the following questions.

One day the lion told his friend, the elephant, about his fear of the cock's crowing. The elephant found this fear very funny and laughed loudly. "How can the crowing of a cock hurt you?" he asked the lion. "Just think about it and tell me."

Answer the questions given below.

Q. What was the lion afraid of?
A. --------------------------------------------------------------------------
Q. Which animal was the lion's friend?
A. --------------------------------------------------------------------------
Q. Why did the elephant laugh loudly?
A. --------------------------------------------------------------------------
Q. What did the elephant ask the lion to do?
A. --------------------------------------------------------------------------



### Read the comprehensions and answer the following questions.

In a thick jungle there lived a big lion. He was very strong. He was the king of the jungle. All the other animals were afraid of him. They would run and hide, when they heard the lion roar.

***Answer the questions given below.***

Q. Where did the lion live?
A. -----------------------------------------------------------------
Q. Was the lion strong or weak?
A. -----------------------------------------------------------------
Q. Which animal was the king of the jungle?
A. -----------------------------------------------------------------
Q. What did the other animals do when the lion roared?
A. -----------------------------------------------------------------

# Tidy up!



### Read the passage then answer the questions

There is so much rubbish in the sea. It is very dangerous for plants and animals that live there. We must be more careful with our rubbish. Birds get caught in the plastic and can't fly. We use plastic bags to carry our food from the supermarket.

Some of these bags go in the sea. Turtles may eat them because the look like jellyfish.

Whales can get plastic caught in their mouths.

All because some people don't take care of their rubbish! So we all must to recycle it! Lets make the world a cleaner place!

### Can you answer the questions in full sentences

1. What is in the sea?
--------------------------------------------------------------------------
2. Why do turtles eat the plastic bags?
--------------------------------------------------------------------------
3. What happens to some of the plastic bags we use?
--------------------------------------------------------------------------
4. Can you think of some other things that are made of plastic?
--------------------------------------------------------------------------

"konwledge isn't free. You have to pay attention"




**Complete the correct name of the following fruits:**
**(Completa el nombre correcto de las siguientes frutas):**




# THE FRIENDLY LION



There was a lion. He lived with his friends in the African savanna. The cheetah and crocodile are his friends. The young lion loved to play with his friends. His friends loved to eat smaller and weaker animals. The young lion didn't like to do that. He liked to eat vegetables and fruits. The cheetah and the crocodile would laugh at him. They always tried to make him eat smaller animals. But the young lion just simply didn't like to eat animals.

One day, the cheetah and crocodile came to the lion's house. They started making fun of him until the poor lion started to cry. The lion was not happy with his friends. He was also not happy with himself. He decided to eat smaller animals so that his friends would stop making fun of him.

The next morning, the lion left the house to search for smaller animals. He walked for three hours but couldn't see any. He wanted to go back home when he saw a gray rabbit in front of him. He was happy he found a smaller animal at last. He happily walked towards the rabbit. He opened his mouth to eat the rabbit but the rabbit didn't try to escape. Just then, he saw that the rabbit was sleeping.

The young lion touched the rabbit with his paw. The rabbit woke up from his sleep. The rabbit was afraid! She started running away. The young lion didn't chase the rabbit. The rabbit was expecting the lion to eat her anytime soon. She knew she couldn't run faster than the lion. The rabbit looked back while running.

The lion was not chasing her. He was looking at the rabbit as she was trying to escape. The rabbit was surprised. She stopped running. She asked the lion why he hadn't eaten her. The lion told her that he doesn't eat animals. The rabbit was glad and delighted she would be safe with the lion. She asked the lion if he would be her friend. The lion thought for a long time before he said, "Yes, I will be your friend."

***1. Answer the questions.***

***Reading Comprehension***

*What did the lion love to eat? (circle the picture that matches the right answer)*



Complete the sentences with the correct words.

is | are

water | cook | eat | play | go | swim | clean

1.  They [ ] going to [ ] their lunch.
2.  She [ ] going to [ ] the plants.
3.  They [ ] going to [ ] basketball.
4.  He [ ] going to [ ] .
5.  She [ ] going to [ ] meal.
6.  He [ ] going to [ ] the table.
7.  They [ ] going to [ ] to school.

# Fruits Crossword

DIRECTIONS: Fill in the crossword puzzle grid with the name of each fruit following the numbers and direction indicated. Use the word bank if you get stuck.

3 → 
5 → 
6 → 
8 → 
9 → 
1 ↓ 
2 ↓ 
11 → 



15 → 
4 ↓ 
16 → 
7 ↓ 
13 ↓ 
17 → 
10 ↓ 
12 ↓ 
14 ↓ 

| | |
|---|---|
| APPLE | KIWI |
| APRICOT | LEMON |
| AVOCADO | ORANGE |
| BANANAS | PEAR |
| BLACKBERRY | PINEAPPLE |
| CHERRIES | RASPBERRY |
| COCONUT | STRAWBERRY |
| GRAPEFRUIT | WATERMELON |
| GRAPES | |

# Vegetables

Write the name of the vegetable next to the picture.

*onions / peas / radishes/ peppers/ cucumbers/ lettuce/carrots/corn /tomato broccoli /eggplant/potatoes /pumpkin / mushrooms/ cabbage*

 1.________________

 2.________________

 3________________.

 4.________________

 5.________________

 6.________________

 7.________________

 8.________________

 9.________________

 10.________________

 11.________________

 12.________________

 13.________________

 14.________________

 15.________________

# Bharatanatyam Arangetram:
## A Milestone in the Journey of a Bharatanatyam Dancer



Arangetram is a Sanskrit word that literally translates to "ascending the stage." In the world of Bharatanatyam, it refers to the debut performance of a dancer, marking the completion of their training and the beginning of their career as a professional dancer. The length of a Bharatanatyam Arangetram can vary depending on the dancer and the choreography, but typically, it lasts for approximately two to three hours.

***What happens at an Arangetram?***

An Arangetram is a significant event in the life of a Bharatanatyam dancer, as it marks the end of their training and the beginning of their career. It is a showcase of the dancer's skills and the culmination of years of hard work and dedication.

The Arangetram typically begins with a traditional invocation to the Hindu gods and goddesses, followed by a series of dance pieces that showcase the dancer's skills and mastery of the Bharatanatyam style. These pieces can include solo performances, group performances, and classical Indian stories brought to life through dance.

Throughout the performance, the dancer displays their mastery of various techniques, including facial expressions, hand gestures, footwork, and body movements. The dancer's abilities to express emotion, convey stories, and captivate the audience with their grace and beauty are put on full display during the Arangetram.

In addition to the dance performance, an Arangetram often includes introductions by the dancer's guru or teacher, family, and friends, as well as performances by musical accompanists, such as singers and instrumentalists. The Arangetram is a celebration of the dancer's achievements and a testament to the hard work and dedication required to become a professional Bharatanatyam dancer.

***The sequence of dances in a Bharatanatyam Arangetram is as follows:***

Pushpanjali: The performance starts with a dance called the Pushpanjali, which is a symbol of respect and offers flowers and salutations to Hindu deities, the guru, and the audience.

Alarippu: The performance may also begin with a rhythmic invocation called the Alarippu. It is a pure dance that combines gratitude and benediction to the gods and goddesses, the guru, and the performance team.

Jatiswaram: The Jatiswaram is the next stage of the performance, where melody is added to the movement. It is a preliminary technical performance without any expressed words, where the dancer presents the unity of music, rhythm, and movements.

Shabdam: The Shabdam is the stage where expressions are introduced. The solo dancer, vocalist, and musical team present short compositions with words and meaning in a spectrum of moods. This introduces lyrical expression(Sahitya-abhinaya) into the recital.

Varnam: The Varnam showcases the dancer's mastery of the various aspects of Bharatanatyam, including rhythm, technique, and expression, and typically features intricate and fast-paced footwork, intricate hand gestures, and expressive facial expressions. The Varnam is typically performed to a Carnatic music composition and is considered the centerpiece of the Arangetram performance.

Padam: In an Arangetram performance, a Padam is usually performed as one of the several pieces to showcase the dancer's skills and mastery of the dancer to display the supreme power of imagination. The Padam is the stage of reverence, where the dance becomes emotional and expresses a devotional religious prayer. The music is lighter and the dance is more intimate, expressing rasa (emotional taste) and mood.

Tillana: The performance ends with a Tillana, a joyful, swift and energetic concluding section of the recital.

Shlokam or Mangalam: The final item in the sequence may be either a Shlokam or a Mangalam. The dancer calls for blessings on everyone.

The significance of the Arangetram in the world of Bharatanatyam cannot be overstated. It is a rite of passage, marking the transition from student to professional and solidifying the dancer's place in the Bharatanatyam community. The dancer's guru, family, and friends, as well as members of the Bharatanatyam community, will be in attendance to show their support and to celebrate the dancer's accomplishments.

In conclusion, the Bharatanatyam Arangetram is a milestone in the journey of a Bharatanatyam dancer. It is a celebration of the dancer's skills and achievements, and a testament to their hard work, dedication, and passion for this beautiful art form. Whether you are a dancer, a music lover, or simply interested in experiencing the beauty of Bharatanatyam, attending an Arangetram is an unforgettable experience that you won't want to miss.

Experience the elegance and grace of one of India's oldest classical dance forms at SaPa. Our talented and experienced instructors will guide you through the intricate movements and expressional aspects of Bharatanatyam, helping you to develop your skills and find your inner performer.

Whether you're a beginner or looking to perfect your technique, our classes are designed to cater to all levels. With a focus on personalized attention and small class sizes, you'll receive the individualized guidance you need to reach your goals.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2023இல் வெளியிடப்பெற்றது.